டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜு வ ல் ல ர் ஸ்

agridoctor.in | 18.8.2024 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 051- Madurai | Online Edition

## போலந்திற்கு முதன்முதலாக அத்திப் பழச்சாறு ஏற்றுமதி - அபேடா ஏற்பாடு

புது தில்லி, ஆக.17

வேளாண், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (அபேடா – APEDA), புவிசார் குறியீடு பெற்ற புரந்தர் அத்திப்பழங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட இந்தியாவின் முதல் அத்திப் பழச் சாறு போலந்துக்கு ஏற்றுமதி செய்ய வசதி செய்து கொடுத்தது. சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்னிலையில் அபேடா தலைவர் அபிஷேக் தேவ் இந்த ஏற்றுமதியை ஆகஸ்ட் 1ம் தேதியன்று கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.



இந்தியாவின் தனித்துவமான வேளாண் பொருட்களை உலக அரங்கில் கொண்டு சேர்ப்பதில் இந்த ஏற்றுமதி ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாக அமைந்துள்ளது.

புரந்தர் ஹைலேண்ட்ஸ் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் தயாரித்த அத்தி சாறு குறிப்பிடத்தக்க கவனத்தை ஈர்ப்பதாக அமைந்துள்ளதுடன், சர்வதேச சந்தையில் ஒரு விருதையும் வென்றுள்ளது.

அபேடாவின் தொடர்ச்சியான ஆதரவு, உதவி இந்த தயாரிப்பின் ஏற்றுமதிக்கு முக்கிய காரணமாக உள்ளது. அபேடாவின் ஆதரவுடன், இத்தாலியின் ஒரு கண்காட்சியில் இந்த அத்திச் சாறு காட்சிப்படுத்தப்பட்டது. இது அதன் உலகளாவிய வரம்பை மேலும் விரிவுபடுத்தியது.

இந்த சாதனை இந்திய வேளாண் பொருட்களின் திறனை வெளிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், வேளாண் ஏற்றுமதியின் மதிப்பை அதிகரிப்பதன் முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டுகிறது. ஏற்றுமதியை ஊக்குவிப்பதில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் முக்கிய பங்கையும் இது எடுத்துக் காட்டுகிறது.

## கிராம சபைக் கூட்டத்தில் பங்கேற்ற

# காந்திகிராம பல்கலைக்கழக வேளாண் மாணவிகள்



மதுரை, ஆக,17

திண்டுக்கல் மாவட்டம், காந்தி கிராம கிராமிய பல்கலைகழக வேளாண் மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியில் இளங்கலை வேளாண்மை பயிலும் இறுதியாண்டு மாணவிகள் சீ.மோனிகா, பி.கீர்த்தனா, கொ.மோ.பிரேமலதா, ஜோ.அமலயோஷ்னி மற்றும் ஆ.இந்துமதி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், அம்மாபட்டி ஊராட்சியில் கிராமத்தங்கல் திட்டத்தின் கீழ் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இதன் ஓர் பகுதியாக ப.அம்மாபட்டி கிராமத்தில் நடைபெற்ற சுதந்திர தின கிராம சபைக் கூட்டத்தில் பங்கேற்று அதில் தான் பேசப்பட்ட கருத்துக்களையும் பொதுமக்கள் முன்வைத்த கோரிக்கைகளையும் கேட்டறிந்தனர். இதில் அவர்கள் வாழைத்தண்டு கரைசல் செய்து காட்டி அதனால் ஏற்படும் பயன்களையும் மக்களுக்கு எடுத்துரைத்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# விருதுநகரில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்ட அரங்கில் கருத்து கண்காட்சி



விருதுநகர், ஆக.17

விருதுநகர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன் தலைமையில் 16.8.24 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. துறை சார்ந்த அனைத்து தலைமை அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்ட அரங்கில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பாக வத்திராயிருப்பு வட்டார விளை பொருட்கள் கருத்து கண்காட்சியில் வைக்கப்பட்டது.

இது குறித்து விருதுநகர் மாவட்ட தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் சுபாவாசுகி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கருத்துக் கண்காட்சியில் வத்திராயிருப்பு வட்டார விளை பொருட்களான கொய்யா, நெல்லி, பப்பாளி, எலுமிச்சை, வாழை என பல வகையான இரகங்கள், கறிபலா, கமலப்பழம் சாகுபடியை ஊக்குவிக்கும் விதமான நன்மைகள் பற்றிய குறிப்புரை, பனை சாகுபடியை ஊக்குவிக்க பனங்கன்றுகள், காய்கறி இரகங்கள் விவசாயிகள் பயனடையும் வகையில் வைத்திருந்தனர்.

கருத்துக் கண்காட்சியினை பார்வையிட்ட விவசாயிகள் சிலர் கறிபலா மற்றும் பனை சாகுபடி குறித்து கேட்டகப்பட்ட கேள்வி களுக்கு தோட்டக்கலை துணை இயக்குநர் சுபா வாசுகி விளக்கமளித்தார். தோட்டக்கலைத் துறையின் மூலம் ஆடிப்பட்ட காய்கறி விதைகள், மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மலலிகை கன்றுகள், பனங்கன்றுகள், வத்திராயிருப்பு வட்டார பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

கருத்துக் கண்காட்சி ஏற்பாடுகளை தோட்டக்கலை உதவி இயக்குநர் சங்கீதா, உதவி தோட்டக்கலை அலுவலர்கள் இராம்பிரகாஷ் மற்றும் சிவா ஆகியோர் செய்திருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# புறக்கடைக்கோழி வளர்ப்பில் நவீன மேலாண்மை முறைகள் குறித்த பயிற்சி

கரூர், ஆக.17

கரூர் மாவட்ட ஊரக இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டிற்காக, இம்மாவட்டத்தில் அமைந்துள்ள கால்நடை மருத்துவ பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில், புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலையில் அமைந்துள்ள மாநில வேளாண் மேலாண்மை மற்றும் விரிவாக்க பயிற்சி நிலையம், மற்றும் கரூர் மாவட்ட ஆத்மா திட்டத்துடன் இணைந்து புறக்கடைக்கோழி வளர்ப்பில் நவீன மேலாண்மை முறைகள் என்ற தலைப்பில் ஆறு நாட்கள் (19.8.24 முதல் 24.8.24 வரை) இலவச பயிற்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த பயிற்சியில் புறக்கடைக்கோழி வளர்ப்பில் உள்ள நவீன தொழில் நுட்பங்கள், கோழியினங்கள், கொட்டகை அமைத்தல், கோழிப்பண்ணை உபகரணங்கள், கோழிகளுக்கான தீவனம் தயாரித்தல், அசோலா உற்பத்தி முறைகள், சிறிய அளவிலான குஞ்சு பொரிப்பக மேலாண்மை, கோழிகளுக்கு தடுப்பூசி அளிக்கும் முறைகள், கோழிகளை தாக்கும் நோய்கள் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள் ஆகிய தலைப்புகளில் பல்கலைக் கழக பேராசிரியர்களின் விரிவுரை, செயல்முறை விளக்கம், முன்னோடி விவசாயிகளின் அனுபவங்கள், படக்காட்சி ஆகிய வற்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு கோழி வளர்ப்பு கையேடு, தேநீர் மற்றும் மதிய உணவு இலவசமாக வழங்கப்படும். பயிற்சியின் இறுதியில் ஆறு நாட்களும் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். மேற்படி பயிற்சியில் 18 முதல் 40 வயதுள்ள, குறைந்தது ஐந்தாம் வகுப்பு வரை படித்த கரூர் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் கலந்து கொள்ளலாம்.

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர், எமது அலுவல கத்தை நேரில் / மின்னஞ்சல் karurvutrc@tanuvas.org.in / அலைபேசி : 73390 57073 மற்றும் தொலைபேசி எண் : 04324 294335 மூலமாக தொடர்பு கொண்டு பயிற்சி பெற்று பயனடையுமாறு மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் கேட்டுக் கொள்கிறார்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | 17.08.2024 | |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 22 | 28 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 25 | 30 | 57 | உருளை (கோலார்) | 36 | 42 |
| 1B | கத்திரி(Nadu) | 50 | 54 | 57A | உருளை(ஊட்டி) | 60 | 68 |
| 2 | வெண்டை | 20 | 25 | 58 | மேரக்காய் | 16 | 20 |
| 3 | தக்காளி (நாடு) | 14 | 18 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 35 | 38 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 14 | 18 | 60 | கேரட் | 80 | 85 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 30 | 35 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 45 | 50 |
| 6 | புடலை | 25 | 30 | 62 | நூல்கோல் | 50 | 58 |
| 7 | பீர்க்கன் | 22 | 26 | 63 | டர்னிப் | 28 | 32 |
| 8 | சுரைக்காய் | 22 | 26 | 64 | மு.கோஸ் | 34 | 38 |
| 9 | பாகற்காய் | 25 | 30 | 65 | மு.கோஸ்(கலர்) | 40 | 45 |
| 10 | கொத்தவரை | 25 | 30 | 66 | காளிபிளவர் | 42 | 48 |
| 11 | பூசணி | 30 | 34 | 67 | பட்டாணி | | |
| 12 | அரசாணி | 22 | 25 | 68 | பூண்டு | 190 | 280 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 50 | 54 | 69 | இஞ்சி | 60 | 128 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 50 | 54 | 70 | புருக்கோலின் | 180 | 200 |
| 15 | சி.வெங்காயம் | 34 | 37 | 71 | பென்னி பீன்ஸ் | 45 | 48 |
| 16 | பெ.வெங்காயம் | 40 | 42 | 72 | குடமிளகாய் | 48 | 58 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 25 | 30 | 73 | ஊட்டி அவரை | | |
| 18 | பச்சை மொச்சை | 30 | 36 | 74 | பஜ்ஜி மிளகாய் | | |
| 19 | முருங்கை | 30 | 34 | 71A | | | |
| 20 | தேங்காய் | 30 | 34 | | | | |
| 21 | மாங்காய் | | | | | | |
| 22 | வாழைக்காய் | 40 | 45 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 65 | 68 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 70 | 78 | 75 | எலுமிச்சை | 110 | 120 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா | 45 | 50 |
| 26 | மரவள்ளி | 25 | 30 | 77 | சப்போட்டா | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 42 | 48 | 78 | பப்பாளி | 30 | 35 |
| 28 | கறிவேப்பிலை | 30 | 34 | 79 | மாதுளை | 150 | 200 |
| 29 | கொத்தமல்லி | 30 | 35 | 80 | திராட்சை | 110 | 120 |
| 30 | புதினா | 8 | 10 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்ச் | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 50 | 60 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 40 | 45 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 25 | 30 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 35 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசனி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | 30 | 32 |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 85 | 90 |
| 40 | கோவக்காய் | 28 | 32 | 91 | பூவன் | 50 | 55 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 30 | 34 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 25 | 30 | 96 | நேந்திரன் | 65 | 70 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 28 | 32 | 97 | செவ்வாழை | 85 | 90 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 35 | 40 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 65 | 68 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | புளி | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 40 | 45 | 104 | நாவல் | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 28 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 20 | 25 | | | | |

# பசுந்தழை உரம் : புங்கம்-ஓர் பார்வை

● புங்கம் ஒரு நடுத்தரமான கிளை அமைப்பைக் கொண்ட மரமாகும். அவரைக் குடும்பத்தைச் சார்ந்த இம்மரம் சுமார் 40 அடி உயரம் வரை வளரும்.

● இவை எல்லா மண்வகைகளிலும் வறட்சியைத் தாங்கி நன்கு வளரும்.

● அமில மற்றும் கார மண் வகைகளிலும் நன்கு வளரும் தன்மை படைத்தவை.

● இவற்றை தரிசு நிலங்களிலும், பயன்படாத நிலங்களிலும், வரப்பு ஓரங்களிலும் வளர்த்திடலாம்.

● இலைகளில் 3.2 சதவீதம் தழைச்சத்தும், 0.3 சதவீதம் மணிச் சத்தும், 0.2 - 1.3 சதவீதம் சாம்பல் சத்தும் அடங்கியுள்ளன.

● கூட்டிலைகளைக் கொண்ட இவை எப்பொழுதும் பசுமையாகவே காணப்படும்.

● ஏப்ரல் மாதத்தில் இவற்றின் இலைகள் முழுவதும் உதிர்ந்து, மே மாதத்தில் தளிர்விட்டு, ஏப்ரல் - ஜுன் மாதங்களில் பூக்களுடன் காணப்படும்.

● பூக்கள் இளஞ்சிவப்பு மற்றும் வெண்மை நிறங்களின் காணப்படும். பட்டாணி வடிவிலான இப்பூக்கள் குட்டையான பூக் காம்புகளைக் கொண்டிருக்கும்.

● காய்கள் பழுப்பு நிறத்தில் 3-6 செ.மீ. நீளத்திலிருக்கும். அவற்றில் 1-2 விதைகள் காணப்படும். பயிர்ப் பெருக்கம் விதைகள் மூலம் செய்யப்படுகிறது.

● இத்தாவரத்தை கால்நடைகள் விரும்புவதில்லை.

● இம்மரத்தின் தழைகளை வெட்டி வயலில் இட்டு மட்க வைப்பதன் மூலம் மண்வளத்தினை மேம்படுத்திடலாம்.

**பயன்கள்**

● இவை பசுந்தழை உரத்திற்காகவும், ஆயுர்வேத மருந்தாகவும், பூச்சிக் கட்டுப்பாட்டிற்காகவும் பயன்படுத்தப்படுகின்றது.

● ஒரு மரத்திலிருந்து ஆண்டொன்றிற்கு சராசரியாக 100-250 கிலோ இலை தழைகளைப் பெற்றிடலாம்.

● நெற்பயிருக்குச் சிறந்த பசுந்தழை உரமாகும்.

● சாணத்தில் இருப்பது போன்று, தக்க அளவில் கரிம நைட்ரஜன் விகிதாசாரம் (19:1) இருப்பதால், தழையிலுள்ள நைட்ரஜன் சத்து முழுமையாகப் பயிருக்குக் கிடைக்கிறது.

● தானியக் குதிர்களில் காய்ந்த புங்கம் தழைகளைப் பயன்படுத்தி பூச்சிகள் வரா வண்ணம் சேமிக்கலாம்.

● ஒரு வருடத்திற்கு, நன்கு வளர்ந்த மரத்திலிருந்து 90 கிலோ வரை விதை கிடைக்கும்.

● நன்கு உலர்த்திய விதையில் 18-27% அளவில் எண்ணெய் உள்ளது.

● புங்கமர எண்ணெயிலிருந்து பயோடீசல் உற்பத்தி செய்யப் படுகிறது.

● புண்ணாக்கில் தழைச்சத்து 5.1%, மணிச்சத்து 1.1%, சாம்பல் சத்து 1.3% மற்றும் சோடியம் 0.8% உள்ளதால் சிறந்த அங்கக உரமாகும் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி கூறியுள்ளார்.



# பொன்னமராவதி வட்டாரத்தில் மானிய விலையில் துவரை விதைகள்

## வேளாண் உதவி இயக்குநர் அறிவிப்பு



புதுக்கோட்டை, ஆக.17

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டாரத்தில் துவரை சாகுபடியினை ஊக்குவிக்கும் பொருட்டு துவரை சாகுபடி பரப்பு விரிவாக்க திட்டத்தின் கீழ் துவரை விதைகள் மானிய விலையில் விநியோகம் செய்யப்படுவதாக வேளாண்மை உதவி இயக்குநர் ரஹ்மத் நிஷா பேகம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், விவசாயிகள் தனிப்பயிராகவும், ஊடுபயிராகவும் அல்லது வரப்பு பயிராகவும் சாகுபடி மேற்கொள்ள மானியம் வழங்கப்படுகிறது.

துவரை சாகுபடி மேற்கொள்ள நடப்பு ஆடி பட்டம் உகந்த பருவமாகும். விவசாயிகளுக்கு விநியோகம் செய்திடும் பொருட்டு உயர் விளைச்சல் துவரை ரகம் எல்.ஆர்.ஜி 52 சான்று விதைகள் பொன்னமராவதி வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. உயர் விளைச்சல் துவரை எல்.ஆர்.ஜி 52 இரகமானது 160 நாட்கள் வயதுடையது மற்றும் வாடல் நோய் எதிர்ப்பு திறன் உடையது. ஒரு ஏக்கருக்கு தேவையான விதைகள், உயிர் உரங்கள் மற்றும் உயிரியியல் கட்டுப்பாட்டு காரணி ஆகிய இடுபொருட்கள் வேளாண் விரிவாக்க மையத்தி லிருந்து 50 சதவீத மானிய விலையிலும், டிஏபி 2 சதவீத கரைசல் இலைவழி தெளிப்பு மற்றும் உழவுக்கான செலவில் 50 சதவீதம் பின்னேற்பு மானியமாகவும், அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு ரூ.2500 மானியமாக வழங்கப்படுகிறது. விவசாயிகள் இது தொடர்பாக தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலரை அணுகியோ, உழவர் செயலியில் முன்பதிவு செய்தோ மானியம் பெற்று துவரை சாகுபடி மேற்கொண்டு துவரை சாகுபடி பரப்பினை அதிகரிக்க முன் வர வேண்டும் என வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
IFFCO
NANO
UREA
PLUS
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# நெல் உழவர் வயல்வெளிப் பள்ளி நிகழ்ச்சியில் வேளாண் அறிவியல் மாணவிகள்

திண்டுக்கல், ஆக.17

திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராம பல்கலைக்கழகத்தில் வேளாண்மை பட்டப்படிப்பு படிப்பவர்கள் விஸ்வப்பிரியா, முத்து ஸ்ரீ அபிராமி விசாலினி ,அப்ஸானா சஃப்ரீன் ஆகியோர், தேனி அருகே உத்தமபாளையம் பகுதியில் நடைபெற்ற நெல் உழவர் வயல்வெளிப்பள்ளியில் விவசாயிகளை சந்தித்தனர். அதில் நெல் விவசாயிகளுக்க்கு இலைவண்ண அட்டை மற்றும் அதற் கேற்ற கைத்தெளிப்பான் பற்றியும் செயல்முறை விளக்க மளித்தனர்.

# பவானி வட்டாரத்தில் இயற்கை வேளாண் இடுபொருட்கள் தயாரித்தல் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

ஈரோடு, ஆக.17

ஈரோடு மாவட்டம், பவானி வட்டாரத்தில் வேளாண்மை-உழவர் நலத்துறை சார்பாக வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் இயற்கை வேளாண் இடுபொருட்கள் தயாரித்தல் தொடர்பான பயிற்சி சின்னபுலியூர் கிராமத்தில் நடைபெற்றது. ம.கனிமொழி, வேளாண்மை உதவி இயக்குநர், பவானி தலைமையில் நடைபெற்றது. பொன்னுசாமி, இயற்கை வேளாண் இடுபொருட்கள் தயாரிக்கும் முறைகள் (பஞ்சகாவ்யா, அமிர்தகரைசல், ஜுவாமிர்தம் மற்றும் மீன் அமிலம், 3 ஜி கரைசல் ) மற்றும் பூச்சி, களை மேலாண்மை முறைகள் குறித்து தெளிவாக விளக்கினார்.

ஜெகதாம்மாள், இயற்கை விவசாயி, இயற்கை வேளாண்மை செய்வதற்கான வழிமுறைகள், பாரம்பரிய நெல் இரக சாகுபடி முறைகள் மற்றும் பசுந்தாள் பயிர்களின் பயன்பாடுகள் குறித்து கூறினார். மோனிசா, வேளாண்மை உதவி அலுவலர், வேளாண்மைத் துறை சார்ந்த மானியத் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். பவானி வட்டார தொழில்நுட்ப மேலாளர் லோ.கங்கா, உழவன் செயலி பதிவேற்றம், இ நாம் மற்றும் இ வாடகை குறித்து விவசாயிகளிடம் கூறினார். பவானி உதவி தொழில்நுட்ப மேலாளர் மணிகண்டன் மற்றும் பூங்கோதை உயிர் உரங்கள் மற்றும் அதன் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு தெரிவித்தார்.

# மானாவாரியில் சிறுதானிய சாகுபடி

தற்போது வெப்ப சலனத்தால் ஆடி 18யிலிருந்து ஆங்காங்கு மழை பெய்து வருவது மானாவாரி விவசாயிகளிடையே சிறுதானிய சாகுபடி விதைப்பை செய்ய தூண்டி விடுகிறது.





ஒரு காலத்தில் அதிகமாக பயிரிடப்பட்ட சிறுதானியங்கள் இடைப்பட்ட காலத்திலே குறைந்து தற்போது படிப்படியாக அதிகரித்து வருகின்றன என்றால் அதற்கு காரணம் மக்களிடேயே உணவு பழக்கம் மாறிவருகிறது. ஏழைகளின் உணவாக இருந்த, சிறுதானியம் இன்று பணக்காரரின் உணவாக மாறி விட்டது.

**சிறுதானிய பரப்பு எப்படி?**

தமிழகத்தில் 1960-70யில் இருந்த சிறுதானிய பரப்பு 19.82 லட்சம் ஹெக்டேர் படிப்படியாக போதிய விளைச்சல் இன்றி பசுமை புரட்சியின் தாக்கத்தால் 7.77 லட்சம் ஹெக்டேராக குறைந்து தற்போது பரவலாக அதிகரித்து வருகிறது.

**சிறுதானிய உற்பத்தி திறன்?**

1960-70 கால கட்டத்தில் உற்பத்தி திறன் 522 கிலோவாக இருந்து இன்று படிப்படியாக 1.176 கிலோ / ஹெக்டேராக அதிகரித்து உள்ளது என்றால் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதாலும் சந்தையில் சிறுதானிய விற்பனை விலை அதிகரித்து வருவதாலும் விவசாயிகள் தற்போது அதிக மாக ஆடி, புரட்டாசி பட்டங்களில் சிறுதானியங்களை சாகுபடி செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்க தகவலாகும்.

**சிறுதானிய சாகுபடி தொழில்நுட்பங்கள் எவை?**

சிறுதானியம் என்பது சோளம், கம்பு, ராகி (கேப்பை) வரகு, குதிரை வாலி, தினை, சாமை, பனிவரகு போன்றவையாகும். விதையளவு மானாவாரியில் விதைக்க ஏக்கருக்கு 4 கிலோ போதுமானது.

**விதை நேர்த்தி**

**1) விதைகளை கடின படுத்துதல்**

ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் பொட்டாஷ் / ஒரு லிட்டர் நீரில் கலந்து 6 மணி நேரம் ஊறிய பிறகு அதனை நன்றாக நிழலில் உலர்த்தி, காய்ந்த பின் 24 மணி நேரம் கழித்து விதைக்கலாம்.

2) பூஞ்சான விதை நேர்த்தி ஒரு கிலோ விதைக்கு டி.விரிடி 4 கிராம் / 10 கிராம் சூடோமானஸ் கலந்து 24 மணி நேரம் கலந்து விதைக்கலாம்.

அடியுரம் – ஏக்கருக்கு 5 டன் மக்கிய தொழுஉரம் அல்லது ஆட்டு கிடை, மாட்டு கிடை அமர்த்தல் வேண்டும். இரசாயன உரம் என்றால் 7 கிலோ தழைசத்து 7 கிலோ மணிசத்து உரங்களை அடியுரமாக இடுவதுடன் ஏக்கருக்கு 5 கிலோ MN MIXTURE FOR MILLAT இடவேண்டும்.

**இடைவெளி**

குதிரைவாலி – 25X10 செமீ, வரகு – 45X10 செமீ, சாமை, தினை – 25X10செமீ இடைவெளியில் விதைக்க வேண்டும்.

விதைப்பு மானாவாரியில் பெரும்பாலானோர் கை விதைப் பாகவும் கொரு கலப்பை மூலமாக வரிசை விதைப்பு விதைப்ப தால் களை எடுக்க சிரமம் ஏற்படாது. களை நிர்வாகம் மானா வாரியில் ஈரம் இருக்கும் களைக்கொல்லி மருந்தை (பெண்டி மெத்தலின்) ஏக்கருக்கு 250 கிராம் பயன்படுத்தலாம். இல்லாத பட்சத்தில் கை களை / சுறண்டி களை எடுக்க வேண்டும். பயிர் பாதுகாப்பு மானாவாரியில் சிறுதானிய பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் அளவிற்கு பிரச்சனை ஏற்படாது, தேவைபடின் அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மைய அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

**சிறு தானிய சாகுபடிக்கு மானியம் உண்டா?**

தரிசாக உள்ள நிலங்களில் சிறுதானிய சாகுபடியை அதிகரிக்க வேளாண் பொறியியல் துறை சார்பாக உழவு மானியம் 40% ஒரு ஹெக்டேருக்கு வழங்கப்படுகிறது. அதிக பட்சமாக 5400 வரை பின்னேற்பு மானியமாக (BACK END SUBSIDY) வழங்கப்படு கிறது. சிறுதானிய விதைகளும் மானியத்தில் வழங்கப்படுகின்றன.

**இந்த திட்டம் எல்லா மாவட்டத்திற்கும் பொருந்துமா?**

விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி, தென்காசி, தேனி, திருச்சி, பெரம்பலூர், அரியலூர், வேலூர், நாமக்கல், சேலம், ஈரோடு, கள்ளக்குறிச்சி, கரூர், திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு பொருந்தும்.

சிறுதானியங்களை எவ்வித செலவின்றி, எல்ல விதமான நிலங்களில் விதைத்து வளமான வருமானத்தை பெற்று வளமாக வாழ்ந்து ஒரு ஆண்டில் ஒரு ஏக்கரில் ஒரு லட்சம் வருமானம் பெற நாம் நன்றாக உழைப்போம். பயிர் சுழற்சியை கடைப்பிடிப்போம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# நாமக்கல் வட்டார விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணையம் முறையில் மானாவாரி பகுதி மேம்பாடு பயிற்சி முகாம்

நாமக்கல், ஆக.17

நாமக்கல் மாவட்டம், ஆவல்நாய்க்கன்பட்டி கிராமத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் செயல்பட்டு வரும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா), திட்டத்தின் கீழ் 'ஒருங்கிணைந்த பண்ணையம் முறையில் மானாவாரி பகுதி மேம்பாடு" குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது.

நாமக்கல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சித்ரா தலைமை வகித்து ஒருங்கிணைந்த பண்ணையம் என்றால் விவசாயத்தில் ஒரு பண்ணையத்தொழிலை மட்டும் மேற் கொள்ளாமல், ஒன்றோடு ஒன்று தொடர்புடைய இரண்டு அதற்கு மேற்பட்ட பண்ணைத் தொழில்களை கூட்டாக மேற் கொள்ளுதலே ஒருங்கிணைந்த பண்ணையம் ஆகும். இதனுடைய சிறப்பு என்னவென்றால் ஒரு பண்ணைத் தொழிலின் கழிவுப்பொருள் மற்றொரு பண்ணைத்தொழிலுக்கு இடுபொருளாக மாறுவதால், ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் இருக்கின்ற நீர் வளத்தை சிறப்பாகப் பயன்படுத்தி அதிக லாபம் பெற்று வருடம் முழுவதும் வருவாய் கிடைக்க ஏதுவாகிறது என பயிற்சியளித்தார்.

நாமக்கல் வட்டார அட்மா தலைவர் பழனிவேல் முன்னிலை வகித்து அட்மா திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பயிற்சிகள், செயல் விளக்க திடல்கள், பண்ணைப்பள்ளி, கண்டுணர்வு பயணம், விவசாயிகள் வேளாண்மை விஞ்ஞானிகள் கலந்துரையாடல் மற்றும் தனது உயிர்ம வேளாண்மையின் பண்ணை அனுபவங்களை பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளிடம் பகிர்ந்து கொண்டார்.

மோகனூர் வட்டார உயிர்ம வேளாண்மை சான்றிதழ் பெற்ற இயற்கை விவசாயி வேலுசாமி, மானாவாரி சாகுபடி செய்யும் விவசாயிகள் ஆண்டு முழுவதும் விவசாயத் தொழிலை மட்டுமே நம்பி இருக்க முடிவதில்லை. ஒருங்கிணைந்த பண்ணையம் மூலமாக நிலையான நீடித்த வேலை வாய்ப்புகள், உற்பத்திச்

செலவு குறைவு, சரிவிகித உணவு கிடைத்தல், உற்பத்தித் திறன் மேம்பாடு, உயர்ந்த வாழ்க்கைத் தரம், பண்ணைக் கழிவுகளின் மறுசுழற்சி, அதிக வருமானம், அதிகரித்த நில உபயோகம் போன்ற நன்மைகள், இயற்கை விவசாயத்தின் நோக்கம், பயன்கள், சிறப்புகள் குறித்தும் விவசாயிகளுக்கு விரிவாக விளக்கமளித்து பயிற்சியளித்தார்.

ஆவல்நாய்க்கன்பட்டி கிராம கால்நடை பராமரிப்புத்துறை உதவி மருத்துவர் கவிதா, பயிர் சாகுபடியுடன் கறவை மாடுகள் / எருமை, ஆடுகள் / செம்மறி ஆடுகள், நாட்டுக் கோழிகள், தீவன பயிர்கள் அதன் மூலம் கிடைக்கும் பயன்கள் குறித்து பயிற்சியளித்தார்.




வட்டார வேளாண்மை அலுவலர் மோகன் வேளாண்மைத் துறையின் மானியத்திட்டங்கள், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம், தமிழ்நாடு சிறுதானிய இயக்கம், ஒருங்கிணைந்த பண்ணையம், பயறு பெருக்குத் திட்டம், நுண்ணீர் பாசனத் திட்டம், பயிர் காப்பீடு திட்டம் மற்றும் பிரதம மந்திரி கவுரவ நிதித் திட்டம் ஆகிய திட்டங்கள் பற்றியும் உயிர்ம இடுபொருட்கள் பயன்பாடு குறித்தும் பயிற்சியளித்தார்.

உதவி தோட்டக்கலை அலுவலர் கார்த்திக் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் பெரியசாமி, துறை சார்ந்த மானியத் திட்டங்களை எடுத்துக் கூறினார். அட்மா திட்ட வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர், இரமேஷ் அட்மா திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கமளித்தார். உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் கவிசங்கர் மற்றும் ஹரிஹரன் ஆகியோர் வருகை புரிந்த விவசாயிகளுக்கு உழவன் செயலி பயன்களை விளக்கமளித்து பதிவேற்றம் செய்தும் நன்றி கூறி இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# அங்ககச் சான்றளிப்பு விதிமுறைகள் குறித்த விவசாயிகள் பயிற்சி

அரியலூர், ஆக.17

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மாநில விரிவாக்கத் திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் (அட்மா) பங்களிப்பு உத்தரவாத முறை அங்ககச் சான்றளிப்பு விதிமுறைகள் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி தழுதாழைமேடு கிராமத்தில் வட்டார வேளாண்மை இயக்குநர் சுப்ரமணியன் தலைமையில் நடைபெற்றது. வேளாண்மை அலுவலர் மகேந்திரவர்மன் முன்னிலை வகித்தார்.

அவர் பேசுகையில் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் வேளாண் துறை செயல்படுத்தும் திட்டங்கள், மானிய விபரங்கள், கிடங்கு இடுபொருட்கள் குறித்து விளக்கினார். விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்புத் துறையின் திருச்சி மண்டல அங்ககச் சான்றளிப்பு ஆய்வாளர் சபாபதி விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தார். அங்கக வேளாண் இடுபொருட்களான பஞ்சகாவ்யம், ஜீவாமிர்தம், அமிர்தகரைசல், தேமூர் கரைசல், ஐந்திலை கரைசல், 3 ஜி கரைசல், மண்புழு உரம் ஆகியவை தயாரிக்கும் முறை குறித்தும் பயிர்களுக்கு அவற்றை



பயன்படுத்தும் முறைகள் குறித்தும் விளக்கினார். மேலும் பயன்படுத்தப்பட்டு வரும் இரசாயன உரங்களின் அளவை படிப்படியாகக் குறைத்து அங்கக உரங்களை மட்டுமே பயன்படுத்தி பயிர் சாகுபடி மேற்கொண்டு அங்ககச் சான்று பெறும் பங்களிப்பு உத்திரவாத முறை குறித்து விளக்கி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளித்தார்.

மேலும் மாட்டுகோமியம், கடுக்காய் மற்றும் உப்பு கொண்டு அங்கக முறையில் களை களை கட்டுப்படுத்தும் முறை குறித்து விளக்கினார். அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, ரைசோபியம் ஆகிய உயிர் உரங்கள் பயிருக்குத் தேவையான சத்துக்களை கிரகித்து கொடுக்கும் முறைகள் குறித்தும், பயிர் சாகுபடியின் போது சணப்பை, கொளிஞ்சி, அகத்தி போன்ற பசுந்தாள் உரங்களை வயலில் மடக்கி உழுவதால் பயிருக்கு தேவையான தழைச்சத்து கிடைப்பதுடன் மண் வளமும் பாதுகாக்கப்படும் எனவும் பயன் படுத்தப்படும் இரசாயன உர அளவை குறைக்கலாம் எனவும் எடுத் துரைத்தார். இரசாயன உரங்களைத் தவிர்த்து இயற்கை உரங்களை பயன்படுத்துவதால் மண்வளம் பாதுகாக்கப்படுவதுடன் சுற்றுப்புற சூழலும் பாது காக்கப்படுவதாகத் தெரிவித்தார். இப்பயிற்சி யுடன் இணைந்து தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் சார்பில் விவசாயிகள் குறைவான நீரை பயன்படுத்தி நவீன வேளாண் தொழில் நுட்பங்களை பின் பற்றி அதிக மகசூல் மற்றும் வருவாய் ஈட்டும் வழிமுறைகள் குறித்த விவசாயிகள் பயிற்சியும் நடத்தப்பட்டது.

விவசாயிகளுக்கு வேப்பமரக் கன்றுகள், தென்னங்கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டன. முன்னதாக வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் மீனாட்சி அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்தும் மண் ஆய்வின் முக்கியத்துவம் குறித்தும் விளக்கினார். உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் மகேஷ்குமார், ஆரோக்கியராஜ் ஆகியோர் உழவன் செயலியை பயன்படுத்தி இடுபொருட்கள் முன்பதிவு செய்யும் முறைகள் குறித்தும் பிரதம மந்திரி கவுரவ நிதி உதவித் திட்ட பயனாளிகள் தங்களது ஆதார் எண்களை புதுப்பிக்கும் முறை குறித்தும் விளக்கினர். பயிற்சியில் துணை வேளாண் அலுவலர் அந்தோணிராஜ், உதவி வேளாண் அலுவலர்கள் பாலாஜி, கங்கா ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் மீனாட்சி, அட்மா திட்ட உழவர் நண்பர் மகாலிங்கம் ஆகியோர் செய்திருந்தனர். தழுதாழைமேடு, வளவனேரி, வீரசோழபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த முன்னோடி விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வெங்காயம் பயிரைத் தாக்கும் நோய்கள்

**கழுத்து அழுகல் – போட்ரிடிஸ் அலி,போட்ரிடிஸ் ஸ்கோமோசா மற்றும் போட்ரிடிஸ் சினேரியா**

**அறிகுறிகள்**

● பொதுவாக அறிகுறிகள் அறுவடைசெய்த பிறகு தான் தோன்றும். நோய் தாக்குதல் வயலில் காணப்படும். அறுவடைக்கு முன்போ அல்லது பின்போ 500-750 பேரன் ஹீட்டில் குளிர்ந்த ஈரப்பதமான வெப்ப நிலையில் கழுத்து அழுகல் நோய் உருவாகும்.

● அறுவடைசெய்யும் போது வறண்டவெப்பநிலை இருந்தால் சேமித்து வைக்கும் போது ஏற்படும் இழப்பு குறைவாக இருக்கும்.

● அறிகுறிகள் முதலில் குமிழின் கழுத்துப் பகுதியில் உள்ள திசுக்கள் மென்மையாக மாறி காணப்படும் அல்லதுஅந்தப் பகுதியில் மிக அரிதான புண்கள் தோன்றும்.

● விளிம்புகள் நோய் தாக்கப்பட்டதிசு மற்றும் திடமான திசுக்களை பிரித்து விடும். நோய் தாக்கப்பட்ட திசுக்கள் சிறுத்தும், மென்மையாகவும் பழுப்பு நிறத்திலும் சாம்பல் நிறத்திலும் இருக்கும். இந்த நோய் படிப்படியாக அடியில் உள்ள குமிழைத் தாக்கும்.

● பிறகு முழு குமிழும் காய நேரிடும். இரண்டாவது மென்மை அழுகல் நுண்ணுயிரிகள் நீர் அழுகல் நோயை உருவாக்கும்.

● பூசணங்களினால் ஏற்படும் கழுத்தழுகல் நோய் குளிர் காலத்தில் முன்பே நோய் தாக்கபட்டு சிதைந்த வெங்காயத்தின் மேல் மண்ணிலேயே காணப்படும் மற்றும் சேமிப்பு கொட்டகையில் உள்ள குப்பைப் பொருள்களிலும் பரவும்.

**நீலப் பூசண அழுகல் – பெனிசிலியம் ஸ்பீசியஸ்**

**அறிகுறிகள்**

● நீலப் பூசணம் பொதுவாக அறுவடைசெய்யும் பொழுதும், சேமித்து வைக்கும் பொழுதும் காணப்படும். தொடக்க அறிகுறிகள் செதில்களின் வெளிப்புறத்தில் நீர் கோத்தது போன்று தோன்றும்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

● பச்சை நிறத்தில் இருந்து நீலம் கலந்த பச்சை நிறத்தில் மாறிவிடும். பின் நைவுப் புண்களின் மேல் சாம்பல் பூசணம் ஏற்படும். நோய் தாக்கப்பட்டபகுதிகளில் உள்ள சதையுள்ள செதில்கள் சாம்பல் நிறமாகவெட்டும் பொழுது தோன்றும்.

● முன் நிலைகளில் பாதிக்கப்பட்ட குமிழ்கள் அழிந்துநீர் அழுகலாக மாறி விடும்.

● வெங்காய குமிழ்களிலும், பூண்டுகளிலும் புண்கள் சிறாய்வுகள் அல்லது தவிர்க்க முடியாத கழுத்து திசுக்கள் ஏற்படும்.

● ஒரு முறை குமிழுக்குள் புகுந்தால் சதையுள்ள செதில் களில் பூசண இழை வளரத் தொடங்கும். இறுதியாக பூசண வித்துக்கள் அதிகப்படியாக நைவுப்புண் மற்றும் புண்களில் தோன்றும்.

**ஃபுசேரியம் அடி அழுகல் – ஃபுசேரியம் ஆக்ஸிபோரம், ஃபுசேரியம் ஸ்பீசியஸ் சிபே**

**அறிகுறிகள்**

● இலைகள் தொடர்ந்து மஞ்சள் நிறமாக மாறி பின்னோக்கி காயத் தொடங்கும்

● வெள்ளை பூசண வளர்ச்சி குமிழின் அடிப்பகுதியில் தோன்றும்

● மண் முலம் இயற்கையாகப் பரவும்

● புண்கள் மற்றும் வேர் வடுக்கள் தான் நோய்க் காரணிகள் உருவாகும் முதல் அறிகுறி

**கருப்பு பூசணம் – அஸ்பர்ஜிலஸ் நைஜர்**

**அறிகுறிகள்**

● நோய் தாக்குதல் கழுத்துப் பகுதியில் உள்ள திசுக்களில் தோன்றும் பின் இலைத் தழைகள் முதிரும் பருவத்தில் இறந்து விடும்

● பாதிக்கப்பட்ட குமிழ்கள் நிறம் மாறி, கழுத்துப் பகுதிகளை சுற்றி கருப்பு நிறமாகாவும், பாதிக்கப்பட்ட செதில்கள் உதிர்ந்தும் காணப்படும்

● சாம்பல் போன்ற கருப்பு நிற பூசண வித்துக்கள் கோடுகள் போன்று பொதுவாக நரம்புகளில் மேல் மற்றும் நடுவில் தோன்றும்

● நோய் தாக்குதல் முதலில் கழுத்துப் பகுதியில் பரவி சதையுள்ள செதில்களின் நடுப்பகுதி வரை பரவும்

● நோய் தாக்கபடும் ஆரம்ப காலத்தில், முழு குமிழுமே கருப்பாக மாறி இரண்டாவது தாக்குதலாக நுண்ணுயிரி மென்மை அழுகல் நோயால் குமிழ்கள் மென்மையாகவும் காணப்படும்

● சில குமிழ்களில் வெளிப்புற அறிகுறிகள் தென்படாது

**கட்டுப்பாடு**

● 0.25% காப்பர் ஆக்ஸில் க்ளோரைட் அல்லது 0.25% க்ளோரோதலோனில் அல்லது 0.25% ஜ்னெப் அல்லது 0.25% மேன்கோசெப்பை மூன்று முறை தழை தெளிப்பாக தெளிக்கவும்

● பயிர் சுழற்சியை மேற்கொள்ள வேண்டும். சேமிப்பு வைத் திருப்பதிலிருந்து அழிவைக் குறைக்க அறுவடைசெய்யப்பட்ட




குமிழ்கள் திடமாக இருக்க வேண்டும். நோய் தாக்கப்பட்டு இருந்தால் அதனை திடமான குமிழ்களுடன் இணைக்கக் கூடாது. 0.25% காப்பர் ஆக்ஸி க்ளோரைடை மண்ணில் தெளிக்க வேண்டும்.

இதனை முனைவர் ந.இரஜினிமாலா, இணைப் பேராசிரியர் (பயிர் நோயியல்), நெல் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், அம்பாசமுத்திரம் - 627 401, திருநெல்வேலி, கு.இளஞ்செழியன், இணைப் பேராசிரியர் (பூச்சியியல்) வ.உ.சிதம்பரனார் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம், தூத்துக்குடி தெரிவித்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# மண் புழுக்களை பாதிக்கும் பயிர்ச் சாகுபடி முறைகள் மற்றும் இரசாயன உரங்கள்!

மண்ணில் கண்ணுக்கு புலப்படக்கூடிய பலவகையான மட்குண்ணிகள் இருந்தாலும் கழிவுப் பொருட்களை மக்க வைப்பதில் மண்புழுக்களே பெரும்பங்கு வகக்கின்றன. ஆனால் தட்ப வெப்ப நிலை, இயற்கை எதிரிகள். மண்ணின் குணங்கள். சாகுபடி முறைகள் இரசாயன உரங்கள் ஆலைக்கழிவுகள் காடுகள் அழிப்பு பூச்சிக்கொல்லிகள், பூஞ்சாணக்கொல்லிகள் மற்றும் கலைக் கொல்லிகள் போன்ற பல காரணிகள் அவற்றை பாதிக்கின்றன.

## பயிர்ச் சாகுபடி முறைகள்

நிலத்தை இயந்திரங்கள் கொண்டு உழுது சீர்படுத்தும் போது நிலத்தின் மேற்புறத்தில் வாழும் மண் புழுக்களில் பெரும் பாலானவை வெளிக்கொண்டு வரப்படுவதால் காகம், மைனா, குருவி போன்ற பறவைகளால் எளிதில் எடுத்துச் சென்று உணவாக உட்கொள்ளப்படுகின்றன.

உழுவு செய்வதன் மூலம் 5 முதல் 10 விழுக்காடு மண்புழுக்கள் மண்ணின் மேற்புறத்திற்கு கொண்டு வரப்படுவதாகவும், 25 விழுக்காடு மண்புழுக்கள் மிகவும் காயப்படுத்தப்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், மிகவும் பலுவான இயந்திரங்கள் கொண்டு உழும் பொழுது மண்ணின் இடை கீழ் பகுதிகளில் உள்ள மண்புழுக்கள் சக்கரங்களால் அதிகமாக காயப்படுத்தபடுவதாகவும் கண்டறியப் பட்டுள்ளது.

## இரசாயன உரங்கள்

அளவிற்கு அதிகமான இரசாயன உரங்களைப் பயிருக்கு இடும் பொழுது அவற்றின் நச்சுகள் மண்ணில் தங்கி விடுகின்றன. இந்த நச்சுகள் மண்புழுக்களின் உடலை வெகுவாகப் பாதிப்பதால் மண்புழுக்கள் அவ்விடத்தை விட்டு சென்றுவிடுகின்றன. இவற்றின் நச்சுத்தன்மை அதிகமாக இருக்கும் பட்சத்தில் புழுக்கள் இறக்கவும் நேரிடுகின்றது.

தழைச்சத்து உரங்களான அம்மோனியம் சல்பேட் என்ற உரத்தை அதிகளவு இடுவதால் மண்ணில் அமில நிலை உருவாகி மண் புழுக்களைப் பாதிக்கின்றன.

மாட்டுச் சாணம் மண் புழுக்களுக்கு உகந்த உணவாக இருந்தாலும், அவற்றை புதியதாகவோ அல்லது கரைசலாக இடும்போது அதிகளவு அம்மோனியா வாயு வெளிப்படுவதுடன் கரிம உப்புகளும் உருவாகி மண்புழுக்களுக்கு பெரும் கெடுதல் விளைவிக்கின்றன. கோழி எரு, குதிரை எரு போன்ற கழிவுகளை உடனுக்குடன் இடும்பொழுது அதிகளவு வெப்பம் வெளிப் படுவதாலும் மண் புழுக்கள் இறக்க நேரிடுகின்றது என சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செல்வம் தெரிவித்தார்.



# தீவனப்பயிர்களில் விதை உற்பத்தி

விவசாய வளர்ச்சியில் விதைகள் மிகவும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. கால்நடைகள் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு, விவசாயிகளுக்கு தேவையான தீவனப்பயிர் இரகங்களில் விதை உற்பத்தி செய்வது இன்றியமையாததாகிறது.

கால்நடை வளர்ப்பில் தீவன மேலாண்மை என்பது மிக முக்கியமான ஒன்றாகும். முறையான தீவன மேலாண்மை கால்நடைகளின் உற்பத்தி திறனை அதிகரிப்பதுடன் கால்நடை வளர்ப்போர் அதிக லாபம் ஈட்டவும் துணை புரிகிறது. முறையற்ற தீவன மேலாண்மை கால்நடைகளுக்கு சில உபாதைகளை ஏற்படுத்துவதுடன், கால்நடை வளர்ப்போருக்கு மிகுந்த பொருளாதாரா இழப்பையும் ஏற்படுத்துகிறது.

**தீவனப் பயிர் விதை உற்பத்திக்கான தொழில்நுட்பங்கள்**

● உயர் விளைச்சல் தரும் இரகங்களை தேர்வு செய்தல்.

● ஒவ்வொரு பயிர் இரகங்களுக்கும் ஏற்ற சாகுபடி பருவத்தை கண்டறிந்து சாகுபடி செய்தல்.

● தேவையானஅளவு வல்லுநர் மற்றும் ஆதார விதைகளை பயன்படுத்துதல்.

● விதை உற்பத்திக்கு ஏற்ற சாகுபடி தொழில் நுட்பங்களை திறம்பட பயன்படுத்துதல்.

● இரகத்தின் மரபுத்தூய்மையை பராமரிக்க போதுமான பயிர் விலகல் தூரத்தை கடைப்பிடித்தல்.

● ஒவ்வொரு இரகத்தின் மரபுத்தூய்மையை உறுதிப்படுத்த அவ்வப்பொழுது கலவன் அகற்றுதல்.

● நிலம் தேர்வு, விதைக்கும் பருவம், பயிரின் வளர்ச்சி, பூக்கும் பருவம் மற்றும் அறுவடைக்கு முந்தைய நிலைகளில் பயிர்களை கண்காணித்தல்.

● சுத்தம் செய்த விதைகளை விதை நேர்த்தி செய்து முறையாக சேமித்தல்.

● தானிய தீவனப் பயிர்களுக்கு போதுமான தழைச்சத்தும், பயறு வகை தீவனப்பயிருக்கு போதுமான மணிச்சத்தும் விதை நேர்த்தி செய்வதன் மூலம் விளைச்சலை அதிகரிக்கலாம்.

● வேலி மசால் விதைகள் நன்றாக முளைக்க மிதமான வெந்நீரில் (3-4 நிமிடங்கள் ஆற வைத்தப்பின்) வேலி மசால் விதைகளைப் போடவேண்டும். ஐந்து நிமிடங்கள் கழித்து நீரை வடித்துவிட்டு விதையை நிழலில் உலர வைத்து விதைத்தால் அதிக முளைப்புத்திறனை பெறலாம்.

● தானிய தீவனப்பயிரான மக்காசோளத்திற்கு 90 சதவீத விதை முளைப்புத்திறனும் சோளத்திற்கு 75 சதவீத முளைப்புத்திறனும் பயறு வகை தீவனப் பயிரான தட்டைப் பயறுக்கு 75 சதவீத விதை முளைப்புத்திறனும் இருக்க வேண்டும்.

மேலும் விவசாயிகள் தங்கள் கைவசம் உள்ள விதைகளை விதைக்கும் போது அந்த விதைகள் சரியான முளைப்புத்திறன் உடையவைதானா என பரிசோதித்து விதைக்க வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மற்றும் விதை உற்பத்தியாளர்கள் தங்களிடம் உள்ள விதைகளை தூத்துக்குடி எட்டயபுரம் ரோடு, ஒழுங்குமுறை விற்பனை கூட வளாகத்தில் செயல்படும் விதைப்பரிசோதனை நிலையத்தில் உரிய கட்டணத் துடன் பரிசோதித்துக் கொள்ளலாம் என திருநெல்வேலி விதைப் பரிசோதனை அலுவலர் ஆனந்திராதிகா மற்றும் தூத்துக்குடி விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் சேக்நூஹ் ஆகியோர்கள் தெரிவிக்கிறார்கள்.




# பொன்னமராவதி வட்டாரத்தில் மண்புழு உரம் தயாரித்தல் குறித்து விவசாயிகள் பயிற்சி



புதுக்கோட்டை, ஆக.17

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி அருகே செம்பூதி கிராமத்தில் விவசாயிகள் பயிற்சி முகாம் நடைபெற்றது. பொன்னமராவதி வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை சார்பில் நடைபெற்ற இந்த விவசாயிகள் பயிற்சியினை வேளாண்மை துணை இயக்குநர் மத்திய திட்டம் செல்வி தலைமையேற்று துவங்கி வைத்தார்.

இப்பயிற்சியில் துணை வேளாண்மை இயக்குநர், மத்திய திட்டம் விவசாயிகளுக்கு மண்புழு உரம், மீன் அமிலம், பஞ்சகவ்யம்,






ஜுவாமிர்தம், ஐந்திலை கரைசல் போன்ற இயற்கை உரங்கள் மற்றும் பூச்சி விரட்டிகளை தயாரிக்கும் முறை மற்றும் பயன் படுத்தும் முறைகள் குறித்து விளக்கினார். மேலும், விவசாயிகள் அனைவரும் பாரம்பரிய நெல் மற்றும் துவரை ரகங்களை பயிரிட்டு உடல் நலம் மற்றும் இயற்கை வளம் காத்து வாழ வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து முருகன், துணை வேளாண்மை அலுவலர், பொன்னமராவதி இயற்கை உரங்கள் குறித்தும் வேளாண் நலத் திட்டங்கள் குறித்தும் எடுத்துரைத்தார். பின்னர், முருகேசன், உதவி வேளாண்மை அலுவலர் பொன்னமராவதி விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிப்பது குறித்து முழுமையாக எடுத்துரைத்தார். முன்னதாக வட்டார தொழில்நுட்ப மேலாளர் சத்தியபாமா வரவேற்புரை வழங்கினார். இறுதியாக நன்றியுரையினை செம்பூதி ஒன்றிய கவுன்சிலர் வழங்கினார். இப்பயிற்சியிக்கான ஏற்பாடு களை உதவி வேளாண்மை அலுவலர் முருகேசன் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் நவீன்குமார் செய்திருந்தனர்.